9th August 1955] [Sri M. A. Manickavelu]

of the Bill for extending it to such areas. That is why it has been provided that by notification it should be extended. Now, when the Select Committee deliberates on this Bill, it is quite open to it to suggest other areas also to which this should be extended. There is no hard and fast rule that it should be extended only to one or two cities. Wherever it is necessary, it will be extended. But it should not be as though it should be extended to all areas, even to panchayat areas where it is not at all necessary. It will be only creating difficulties in places where things are going on normally and smoothly. Since this Bill is going to be referred to a Select Committee, all the suggestions that have been made will be taken into consideration then and we shall make the Bill as acceptable as possible. With these words, Sir, I request that the Motion may be accepted. I shall give the names of the Members of the Select Committee a few minutes later. In the mean time let us take up the next Bill."

SRI K. RAJARAM :—"I have requested the other Party leaders to give a list of the names of Members who may serve on the Select Committee. Within ten minutes' time the list may be ready."

DEPUTY SPEAKER :—"In the mean time the other Bill may be taken up."

(2) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1955.

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I beg to introduce the Madras General Sales Tax (Second Amendment) Bill [a], 1955, and move—

'*That the Bill be taken into consideration at once.*'

" This Act was passed in the last session. Some difficulty was felt in the working of the Act. That is why I am making this motion. In the matter of levying the tax on certain categories of cigars and cheroots, one-point tax was proposed to be levied either at the first sale or at the first purchase point. I shall explain how the difficulty arises. Suppose the tax is levied at the first purchase, that is, on raw tobacco, whether cured or uncured. Now, there will be no tax on the raw tobacco at the first purchase. In order to escape from the tax, the purchaser will buy the tobacco, paying no tax. Then he will distribute that tobacco among a number of people who will manufacture it into beedies and also see that the turnover is within the limit of Rs. 10,000. Thus, the purchaser disperses the whole transaction and escapes the tax. So, 10-10 a.m.
in order to prevent evasion we move these amendments. Sir, we want that the words 'whc is not exempt from taxation under section 3, sub-section (3)' should be added. If this is done, we can avoid evasion of the tax. This is the gist of the amendment which we want to make. An Ordinance has already been passed in this matter. We are only converting it into an Act. That is all. There is nothing more."

---

a Published in the *Fort St. George Gazette*, dated 27th July 1955.

DEPUTY SPEAKER :—" Motion moved—

'That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1955, be taken into consideration at once.' "

10-12 a.m. SRI S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற சட்டசபைக் கூட்டத்தில் சுருட்டு, பீடி, புகையிலை ஆகியவைகளின் மீது ரூபாய்க்கு அரையணா வீதம் ஒரு முனை விற்பனைவரி விதிக்கவேண்டும் என்பதற்காக நிறைவேற்றப்பட்ட விற்பனை வரிச் சட்டத்திற்கு இப்பொழுது ஒரு திருத்தம் தான் கொண்டுவந்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார். அதாவது, ரூ. 10,000-க்கு மேல் விற்பனை இருந்தாலும் சரி, ஒரு முனை விற்பனைவரிக்கு உட்பட்டு புகையிலை வாங்குபவர்களாய் இருந்தாலும் சரி, ரூ. 10,000-க்கு மேல் முதலில் வியாபாரம் செய்கிறவர்கள் மீது ரூபாய்க்கு அறையணா வீதம் வரி விதிக்கப்படவேண்டும் என்பதுதான் திருத்தம். கனம் மந்திரி அவர்கள் பேசும்பொழுது சாதாரணத் திருத்தம்தான் ; வரியிலிருந்து தப்பித்துக்கொண்டிருக்கிறவர்களிடமிருந்து பணத்தை வசூலிப்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னார். ஆனால் இதிலும் கஷ்டங்கள் இருக்கின்றன. அதாவது சர்க்கார் அதிகாரிகள் இந்தத் திருத்தத்தை எப்படி பிரயோகப் படுத்தப்போகிறார்கள் என்பதிலும் சிரமம் இருக்கிறதென்று நினைக்கிறேன். ஏனென்றால், ஒரு வியாபாரி புகையிலையைப் பயிர் செய்யக்கூடிய விவசாயிகளிடம் வரி வாங்கினால், முதல்தடவை வாங்கும்போது, ரூபாய்க்கு அரையணா வீதம் வரி விதிக்கப்படும். ஒரு வருஷத்தில் ரூ. 10,000-க்கு மேல் பல விவசாயிகளிடமோ ஒரு விவசாயினிடமோ வாங்கியிருந்தால், அந்த வரி விதிக்கப்படும். ரூ. 10,000-க்கு குறைவாக வாங்கி மற்றொரு வியாபாரியிடம் விற்றிருந்து, அந்த வியாபாரி ரூ. 10,000-க்கு மேல் வியாபாரம் செய்பவராகயிருந்தால், அந்த இரண்டாவது வியாபாரியினிடம் இந்த வரி வசூலிக்கப்படுமா என்று மசோதாவில் விளக்கமாக இல்லை. ஆகையால் இது ஒரு சங்கிலித் தொடராக ஒரு முனையிலிருந்து பலகட்ட விற்பனை வரியாக மாறிவிடுமோ என்ற பயம் இருக்கத்தான் செய்கிறது. ஒரு வியாபாரி அப்புகையிலையை பீடிகள், சுருட்டுகளாகத் தயாரிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் ரூ. 10,000-க்கு குறைவாக உற்பத்தி செய்யக் கூடிய சின்னத் தொழிலாளியாக இருக்கலாம். அவன் அந்த பீடியை மற்றொரு கடைக்கு விற்கிறான். அவன் விற்கும்பொழுது ரூ. 10,000-க்கு குறைவாக மதிப்பு இருந்தால் அந்த பீடி, சுருட்டுக்கு விதிவிலக்கு உண்டு. அந்தக் கடைக்காரன் எவ்வளவோ சிறிய வியாபாரியாக இருந்தாலும், ரூ. 10,000-க்கு மேல் விற்பனையாகிறது என்று வரி போடலாமா ? 'ஆஞ்சனேயர்' சுருட்டு என்று இருக்கிறது என், 'வினாயகம்' சுருட்டு என்று வைத்துக்கொள்வோம். ஒரு கம்பெனிக்காரர் அந்த 'வினாயகம்' சுருட்டை ரூ. 10,000 மதிப்புக்குக் குறைவாகவே தயார் செய்கிறார். ரூ. 10,000-க்குக் குறைவாகத் தயார் செய்வதால், அந்த வியாபாரிக்கு முதல் விற்பனை வரி கிடையாது. அதை அக்கம்பெனிக்காரர் வேறு ஒரு கம்பெனிக்கு விற்கிறார். அந்தத் தனிப்பட்ட வியாபாரியிடம் ரூ. 10,000-க்கு அதிகமாக வியாபாரம் நடக்கிறது, அதை விற்கும் கடைக்காரர்களிடமெல்லாம் 'வினாயகம்' சுருட்டுக்கு விற்பனை வரி கொடுக்கவேண்டுமென்று வசூலிக்கப்படுமா ? அல்லது 'வினாயகம்' சுருட்டு ரூ. 10,000-க்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படாததால் 'வினாயகம்' சுருட்டு எந்தக் கடையில் இருந்தாலும் அதற்கு விற்பனை வரி கிடையாது என்று அர்த்தமா ? இந்த மாதிரி ஒரு சந்தேகம் இருக்கிறது. அதை சர்க்கார் யோசிக்கவேண்டும். யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரும் வரையில் இந்த சபையில் இந்த மசோதாவை பிரேரேபிக்காமல் இருப்பது நல்லது. இப்பொழுது பொறுக்குக் கமிட்டியாலாவது இதற்குவேண்டிய time எடுத்துக்கொள்ளவேண்டும்.

"சென்ற சட்டசபைப் கூட்டத்தில் இந்த மசோதாவைப் பிரேரேபித்த போது பல இடையூறுகள் இருக்கின்றன என்று வியாபாரிகள் சொன்னார்கள். அவற்றையும் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர இந்த சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

9th August 1955] [Sri S. Ramalingam]

முதலாவதாக, **tobacco** மீது ரூபாய்க்கு அரையணா வீதம் ஒரு முனையில் வரி விதிக்கவேண்டுமென்று ஏப்ரல் மாதத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது. அது கவர்னருடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஏப்ரல் மாதக் கடைசியாகிவிட்டது. விற்பனை வரி அதிகாரியிடம் வியாபாரிகள் போய் விற்பனைவரி வசூலிப்பதற்காக தங்களை '**dealers**' என்று எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்க விரும்பினால், அதற்கு சர்க்காரிடமிருந்து உத்திரவு வரவில்லை. விற்பனை வரி வசூலிக்கலாமென்று அதிகாரம் கொடுக்கக்கூடிய லைசென்சு வழங்கப்படவில்லை. அதனால் பல வியாபாரிகளுக்கு விற்பனை வரியாரிடமிருந்து வசூலிக்கலாமோ அவர்களிடமிருந்து வசூலிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. இம்மாதிரியான நிலைமையில் ஜூன், ஜூலை மாதத்திலிருந்து அல்லாமல் ஏப்ரல் மாதத்திலிருந்து விற்பனை வரி கொடுக்கவேண்டுமென்று சொன்னால், வியாபாரிகள் தங்கள் கையிலிருந்துதான் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆதலால், கடந்த மாதங்களை விட்டுவிட்டு இனிமேல் வசூலிக்கலாமென்ற வசதியை வியாபாரிகளுக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப்பற்றி விவாதிக்கும்போது, மத்திய சர்க்காருக்குக் கொடுக்கக்கூடிய **Central excise duty**-யிலிருந்து விலக்களிக்கவேண்டுமென்று ஸ்ரீ ராமசாமித் தேவர் இந்த சபையில் சொன்னார். அதற்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது என்று இந்த சபையில் அரசாங்கத்தாரால் சொல்லப்பட்டது. அதை வியாபாரிகள் நம்பினார்கள். ஆனால் நடைமுறையில் நடப்பது என்ன? விற்பனை வரி விதிகளில், '**article sold by the dealer**,' அதாவது ஒரு வியாபாரி எந்தப் பொருளை விற்கிறானோ அந்தப் பொருளுக்கு **Central excise duty** கொடுத்திருந்தால், அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டுமென்று ஏற்கனவே இருக்கிறது. அதன் பிறகு சுருட்டின்மீது 'லேபிள்' ஒட்டுகிறார்கள். அந்த லேபிள் ஒட்டுவதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. வாங்கும்போது வரி கொடுக்கிறார்கள்; சுருட்டாக மாற்றும்போது **excise duty** கொடுக்கிறார்கள். இந்த இரண்டு விதத்தில் வியாபாரிகள் பணம் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இரண்டு விதத்தில் கட்டக்கூடிய வரியிலிருந்தும் விதிவிலக்கு அளிக்கப்படுவதாக நாங்கள் புரிந்துகொண்டோம். ஆனால், இப்பொழுது லேபிளுக்குத்தான் வாங்கும்போது **excise duty** கொடுத்ததற்காக விதிவிலக்கு என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதிலும் சர்க்கார் கவனம் செலுத்தி சுருட்டுக்கு லேபிள் கட்டும்போதும், புகையிலையாக வாங்கும்போதும் கட்டக்கூடிய **excise duty**-யிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பீடியாகச் சுற்றுகிறவர்களுக்கு **exemption** கிடையாது. புகையிலையைப் பொட்டலமாக கட்டி விற்கிறவர்களுக்கு **Central excise duty**-யிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பலவித சங்கடங்கள் இருக்கின்றன. இதில் சர்க்கார் கவனம் செலுத்தி விற்கும்போது **duty** கட்டினாலும் வாங்கும்போது கட்டினாலும் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டுமென்று விதிகளைத் திருத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"மூன்றாவதாக இந்த சபையில் அம்மசோதாவைப்பற்றி விவாதிக்கும்போது ஒரு முனையில்தான் இந்த வரியைப் போடுவதாக சர்க்காருக்கு உத்தேசம் என்று சொல்லப்பட்டது. **Manufacture** ஆகப்பட்ட பிறகும் **Raw tobacco** வாக வாங்கும்போதும் ரூபாய்க்கு ½ அணா வீதம் வரி செலுத்தியிருந்தால் **rebate** கிடைக்கும் என்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது இரண்டு விதத்திலும் கட்டாதவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படும் என்றும் **rebate** பெரும்பாலான வியாபாரிகளுக்கு கிடைக்காதென்றும் தெரிகிறது. பீடி, சுருட்டு விற்கும் வியாபாரிகளாக இருந்தாலும் பீடி செய்யக்கூடிய வியாபாரிகளாக இருந்தாலும் அவர்கள் நேரடியாகப் புகையிலையை வாங்குவது கிடையாது. அதற்கு வேண்டிய வசதியும் கிடையாது. ரொக்கம் இருக்கலாம். ஆனால் கிராமங்களில் இருக்கக்கூடியவர்கள் நகரங்களில் இருக்கக்கூடிய கமிஷன் மண்டிக்காரர்களிடம் கடன் வாங்குவதென்ற வசதி

வைத்துக்கொண்டிருப்பதால் **godown keepers** இடம் அதை விற்று விடுகிறார்கள். பத்தாயிரம் ரூபாய்க்கு மேலான வியாபாரம் இதனால் ஏற்படுகிறது. கிராமங்களில் இருக்கக்கூடிய **godown keepers** இடம் **purchasing point**-ல் வரி வசூலிக்கப்படுகிறது. சுருட்டு, பீடி, சிகரெட்டுகளாகத் தயார் செய்து அப்பொருள்களை விற்கும்போது ஒரு வரியும் கிடையாதென்ற நிலைமை ஏற்படும். **Rebate** கிடைக்க இதனால் சந்தர்ப்பம் இருக்காதென்று சர்க்காருக்கு எடுத்துச் சொல்கிறேன். சர்க்கார் ஒரு வரியைப்போட்டு விட்டார்கள். அதற்கான ஸ்தாபனம் இருக்கிறது. இந்த இரண்டு மூன்று மாதங்களுக்கும் எத்தனை வியாபாரிகளுக்கு **rebate** கொடுக்கப்பட்டிருக்கிறதென்று பார்த்து உண்மையிலேயே பெரும்பாலான வியாபாரிகளுக்கு இந்த **rebate** கிடைக்க சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தால் **purchasing point**-ல் வரியை வாங்குவதை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

10-22 a.m. * **Sri K. VINAYAKAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் சுருட்டு வியாபாரத்தைப்பற்றி பேசும்போது சுருட்டு வியாபாரிகளுக்கு சலுகை அளிக்கவேண்டுமென்று சொல்லி விநாயகம் சுருட்டு என்ற சுருட்டுக்கு சலுகை தரவேண்டும் என்று சொன்னார். அந்த விநாயகம் நான் அல்ல. விநாயகம் என்ற சுருட்டு வியாபாரி நான் அல்ல. எனக்கு ஏதோ அவர் பரிந்து பேசினார் என்று நினைக்கவேண்டாம். உதாரணமாக பட்டிணத்தார் துவரம்பருப்பு என்றிருக்கிறது. அப்படியென்றால் பட்டிணத்தார்கள் எல்லாம் துவரம் பருப்பு விற்கிறார்கள் என்று அர்த்தம்? அதுபோலதான் இந்த விநாயகம் சுருட்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்."

Sri A. S. SAHAJANANDA :—" கனம் தலைவர் அவர்களே, இந்த விற்பனைவரி வசூலிப்பது ரொம்ப அக்கிரமமாக இருக்கிறது, ஒரே சமயத்தில் பல இடங்களிலும் வரி. இது தொல்லையை உண்டாக்குகிறது. தாய் வீட்டிலிருந்து பிள்ளைகளுக்கு, கேழ்வரகு மிளகாய் இவைகளைக் கொண்டுபோக வேண்டியிருந்தாலும்கூட ரொம்ப ஆக்ஷேபகரமாயிருக்கிறது. அதற்கு விற்பனைவரி கட்ட வேண்டியதாயிருக்கிறது. முக்கியமாக ஒன்று சொல்லுகிறேன். பள்ளிக்கூடங்களில் ஏழைக் குழந்தைகளுக்கு மத்தியானச் சாப்பாடு கொடுக்கிறார்கள். அந்தச் சாப்பாட்டிற்கு எங்கள் ஜில்லாவில் விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. இது ரொம்பவும் அநியாயமாக இருக்கிறது. இந்த **sales tax** ஜனங்களுக்கு எத்தனையோ வகையில் கஷ்டத்தை உண்டு பண்ணுகிறது. ஆகையால் மந்திரி அவர்கள் மத்தியானச் சாப்பாட்டிற்கு விற்பனை வரிபோடும் விஷயத்தை பரிசீலனை பண்ணி அதை ரத்து செய்யும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் இப்போது விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. முன்பெல்லாம் $2\frac{1}{2}$ அணுவுக்கு 13 அவுன்சு கொடுக்கப்பட்டது. இப்போது அதை 25 அவுன்சாக மாற்றவேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகையால் மத்தியானச்சாப்பாடு அளிப்பது விட்டுவிடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் விற்பனை வரி அதிமாகப் போடுவதுதான். ஆதலால் மத்தியானச் சாப்பாட்டிற்கு விற்பனை வரியே போடக்கூடாதென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri A. RATNAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ராமலிங்கம் அவர்கள் பேசியதை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவானது சென்ற ஆண்டு இச்சபையிலே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அப்போது பல சட்டசபை மெம்பர்கள் இதனைக் குறித்து எந்தெந்த விதிகளில் பொது மக்களையும் வியாபாரிகளையும் பாதிக்கக்கூடியதென்றும் ஓரளவிலே அரசாங்கத்தைக்கூட வியாபாரிகள் ஏமாற்றுவதற்கு வலை வீசுவார்கள் என்றும் அலசிப் பேசியதைக்கூட அமைச்சரவர்கள் கவனியாமல், பரிசீலனை செய்யாததால், சட்டம் நிறைவேற்றப்பட்டது. கொஞ்ச நாளைக்கெல்லாமே ஒரு திருத்தத்தை சபை முன்பு கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

9th August 1955] [Sri A. Ratnam]

10-25 a.m.

" நான் கூறுவது எல்லாம், சட்டசபை உறுப்பினர்கள், சில கருத்துக்களை கூறுகிறார்கள் என்றால், அவைகளுக்கு அவகாசமான ஆலோசனை கொடுத்து, அவைகளை எல்லாம் பொறுக்குக்கமிட்டியில் வைத்து பிறகு சட்டமாக நிறைவேற்றினால், எல்லா வகையிலும் அந்த சட்டம் நல்ல முறையில் அமையும். அதை விட்டு, மாதம் ஒரு முறை திருத்தம், 6 மாதத்திற்கு ஒரு முறை திருத்தம், ஒரு வருஷத்திற்கு ஒரு முறை சட்டத்தில் திருத்தம் செய்து கொண்டிருப்பது மேன்மேலும் பொது மக்களை கஷ்டங்களுக்குத்தான் உள்ளாக்கும். குறிப்பாக சுருட்டு, பீடி முதலியவைகளுக்கு அதிகமான முனைகளில் விற்பனை வரி கட்டாது, அதிகமான விற்பனைவரி கட்டாது வியாபாரிகளுக்கு சலுகைகள் அளிக்கவேண்டுமென்று பெரும் கூச்சல் ஏற்பட்டதின் காரணமாக ஒரு முனை விற்பனை வரி போதும் என்று பேசி, அவ்விதமே சட்டத்தை மாற்றினோம். மூன்றாவது பிரிவின்படி யார், யார், அனுமதி பெறவில்லையோ, அந்த வியாபாரிகளின் மேல், மேலும் வரிவிதித்து நிர்ப்பந்தபடுத்தி, வரி வசூல் செய்யவேண்டுமென்ற கொள்கையுடனேதான் இந்த திருத்த மசோதா அமைச்சரால் கொண்டுவரப்படுகிறது. மேலும், பல சட்டசபை உறுப்பினர்கள், யார் யார் புகையிலை, தீடபெட்டி, சர்க்கரை, சுருட்டு இன்னும் சிகரெட்போன்ற சாமான்களுக்கு சென்டரல் **Excise duty** கொடுக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் இந்த விற்பனை வரிச்சலுகை காட்டவேண்டும், ஒரு முனை விற்பனை வரி போட்டால் போதும், அப்போதுதான், அந்த வியாபாரிகளுடைய வியாபாரம் விருத்தி அடையுமென்று எடுத்துக்காட்டி, தனிப்பட்டவர்கள் கொண்டுவந்த மசோதாக்களை எல்லாம் அமைச்சரும், கவர்னரும், நிராகரித்து விட்டார்கள், என்பதை வருத்தத்துடன் இந்த சபைக்கு ஞாபகமூட்டுகிறேன். இவ்விதமான சலுகைகளை வியாபாரிகளுக்குக்கொடுக்க அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. அமைச்சர்கள், அதற்கான மசோதாக்களை கொண்டு வந்து திருத்தம் செய்வார்கள், நிறைவேற்றுவார்கள் என்று இச்சபையிலுள்ள பிரதிநிதிகள் நினைப்பதாக இருந்தால், அவர்கள் கண்டிப்பாக ஏமாற்றம்தான் அடைவார்கள், வரிபோடுகிறோம் என்றால், அதிலேயும், மத்திய சர்க்காருக்கு செல்லும் சென்ட்ரல் எக்சைஸ் **duty**, சென்னை சர்க்காருக்கு நேரடியாக செல்லும் **Sales tax**, இது எல்லாம் சாதாரண மக்களை, பாமர மக்களைத்தான் பாதிக்கிறதே தவிர, வியாபாரிகளை, அல்லது உற்பத்தியாளர்களை பாதிப்பது கிடையாது. ஒரு ரூபாய் வரி உயர்த்தினால் உடனே 4 அணாவிற்கு விற்ற சாமானை $4\frac{1}{2}$ அணா கொடுத்துதான் சாதாரண மக்கள் வாங்கவேண்டியதாக இருக்கிறது. ஒரு தம்படி, விற்பனை வரி போட்டாலும், அல்லது உயர்த்தினாலும், வியாபாரிகள், உற்பத்தியாளர்கள், தங்கள் பொருள்களுக்கு ரூபாய்க்குக்காலணா உயர்த்திவிடுகிறார்கள். இந்த விற்பனை வரியாலும், சென்ட்ரல் **Excise duty** யாலும், பாதிக்கப்படுகிறவன், வியாபாரிகள் விற்பனை செய்பவர்கள், உற்பத்தியாளர்கள் அல்ல. இச்சாமான்களை வாங்குபவர்கள், ஏழைத் தொழிலாளர்கள், பாட்டாளிமக்கள், கூலிகள், சாமான்ய சாதாரண பாமர மக்கள். இவர்கள்தான், அந்த வரிகளைக்கொடுக்கிறார்கள், அதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் ஒரு விதத்தில், விற்பனை இதனால் பாதிக்கப்படுகிறது. வியாபாரிகள் சரக்குகளை அதிகமாக சேகரித்து வைத்து விற்பது கஷ்டமாகிவிடும். 20 ரூ ாய் வரி ஸ்தலஸ்தபானங்களுக்கு கட்டுபவர்கள்தான் தீப்பெட்டி, சர்க்கரை போன்றவைகளை ஒரு இடத்தில் சேமித்து வைத்து ஒருவர் விற்பனை செய்யமுடியும். அதே நேரத்தில் அந்த சரக்குகளுக்கு விற்பனை வரி முன்னதாகவே கட்டவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதால், பல வியாபாரிகள் அதிகமாக பொருள்களை சேகரித்துவைத்து வியாபாரம் செய்வதில்லை. அதனால் வியாபாரத்தில் மந்தம் ஏற்படுகிறது. அதன் காரணமாக நாட்டின் சுபீட்சம் மந்தம், அடைகிறது, வியாபார நாணயத்திலும் பிற்போக்கான நிலைமை ஏற்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும். வியாபாரம் நல்ல முறையில் உயர்ந்து வளர்ந்தால்தான் நாட்டு மக்களின் சுபிட்சம் ஓங்கி வளரும், மக்களுடைய வாங்கும் சக்தி தற்போது குறைந்திருக்கிறது. ஆனால் அதைப் பற்றி எல்லாம் இந்த சபையில் பேசவேண்டிய அவசியமில்லை என்பதை

எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். பொதுவாக வாங்கும் சக்தியும் விற்பனையாகும் தன்மையும் நாட்டில் குறைந்துகொண்டேபோகிறது. பொது மக்களும், பாட்டாளி மக்களும், அதே சமயத்தில் வியாபாரிகளும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் உற்பத்தியாளர் வருவாயும், உற்பத்தியும் குறைந்து விடுகிறது. அதனால் அந்த உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளி நேரடியாக பாதிக்கப்படுகிறான் அதனால் வேலை நிறுத்தங்கள் ஏற்படுகின்றன ; அல்லது கதவடைப்புகள் நடக்கின்றன. வேலையில்லா திண்டாட்டம், அதிகமாகிக்கொண்டே போகிறது. இதற்கெல்லாம் மூலகாரணம், இந்த வரி உயர்வுந்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சர்க்கார் சொல்லும், எதெற்கெடுத்தாலும் வரி போட்டுத்தான் ஆகவேண்டும், அதனால்தான் சர்க்கார் செலவினங்களை ஈடு செய்யமுடியுமென்று அதே சர்க்காருக்குச் சொல்லுகிறேன், வரப்போகும் ஐந்தாண்டு திட்டங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்வதைக் குறைத்து, வியாபாரிகளுக்குப்போடும் வரிகள் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். யாரோ சிலர் வரியை ஏமாற்றுகிறார்கள் என்பதற்காக இதுபோன்ற சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றினால், அது பொது மக்களை மாத்திரம் பாதிப்பது அல்ல, சாதாரணமாக நாட்டையே அழித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. இச்சபையிலுள்ள அங்கத்தினர்கள், வியாபாரப் பிரதிநிதிகள். தீப்பெட்டி, சர்க்கரை, சிகரெட்டு முதலிய பொருள்களுக்கெல்லாம் ஒரு முனை விற்பனை வரி போடவேண்டுமென்று அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள், அந்த குறைகள் எல்லாம் நீங்க, நியாயமான முறையில், வியாபாரிகள், தொழிலாளர்கள், பொது மக்களுக்கு விரிவான முறையில் நன்மை பயக்கக்கூட்டிய முறையில் ஒரு மசோதா கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும். அதைவிட்டு இம்மாதிரி திருத்தச் சட்டங்கள் அடிக்கடி நிறைவேற்றுவதால், நம் செலவினங்கள் அதிகமாகின்றன, சட்ட சபை செலவும் அதிகமாகிறது, நமது நேரமும் வீணாகிறது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மேலும், நண்பர் ராமலிங்கம் கூறியதுபோல், பல திருத்த மசோதாக்களை எல்லாம், இது சம்பந்தமாக ஒன்று சேர்த்து, ஒரு பொறுக்குக்கமிட்டிக்கு விட்டு, பரிசீலனை செய்த பிறகு இச்சபையில் கொண்டுவந்து நிறைவேற்றலாம், அதனால் எல்லா விதத்திலும் மக்கள் பயனடைவார்கள். வியாபாரிகளும பயனடையக்கூடும். நாட்டில் தொழில வளமும் பெருகும், என்பதை முக்கியமாக குறிப்பிட்டுவிட்டு, அமைச்சர் அவர்கள் இந்தத்திருத்த மசோதாவை உடனடியாக வாபஸ் பெற்றுக்கொண்டு நான்சொன்ன யோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.''

10 33 a.m. SRI M. KALYANASUNDARAM :—'' கனம் உதவி சபாநாயகர் அவர்களே. புகையிலை பொருள்களின்மீதும், புகையிலைமீதும் போடக்கூடிய விற்பனை வரியை எதிர்கட்சிக்காரர்களாகிய நாங்கள் எதிர்த்து வந்திருப்பது சபைக்குத் தெரியும், என்று நம்புகிறேன். அந்த அபிப்பிராயத்திலிருந்து மாறவேண்டிய அவசியம் அப்போதும் ஏற்பட்டிருப்பதாக எங்களுக்கு தோன்றவில்லை. இப்போது சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்த மசோதாவின் நோக்கம் ; இந்த வரியிலிருந்து வியாபாரிகள் யாவரும் தப்பிக்காமல், வரியை செலுத்துவதற்காகக்கொண்டுவரப்பட்டிருக்கிறது, என்பதை மந்திரி அவர்கள் எடுத்துச்சொன்னார். சில்லரை வியாபாரிகளுக்கு விதிவிலக்குக் கொடுக்க அல்ல, பெரிய வியாபாரிகள் தப்பிப் போவதைப் பிடிக்க இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்பதை நானும் உணர்கிறேன். சர்க்காரின் கொள்கைபடி. இந்தத் திருத்த மசோதா கொண்டுவரவேண்டியது அவசியமாக இருக்கலாம். ஆனால் எதிர்க்கட்சியாகிய நாங்கள் இந்த வரியை எதிர்த்து வந்திருப்பதைப் பார்க்கும்போது இப்போது கொண்டுவரப்படடிருக்கிற திருத்தத்திற்கு அவசியமேயில்லை. என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம். விற்பனை வரியை ஏமாற்றுவதற்கு வியாபாரிகள் பல தந்திரங்களை செய்வார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய முறையில்

விற்பனை வரி இருக்கும் வரையில், அந்த வரியை வசூலிப்பதில் பல இடையூறுகள் இருக்கத்தான் போகிறது. பெரிய வியாபாரிகளும் வரியை ஏமாற்ற என்னென்ன தந்திரங்கள் செய்யவேண்டுமோ, அதை கையாளுவார்கள். புகையிலை மீது விற்பனை வரி போட்டவுடன், பெரிய வியாபாரிகள் சிறிய வியாபாரிகள் மூலம் வாங்கவும், உற்பத்தி செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை சிறு வியாபாரிகள்மூலம் விற்பனை செய்யவும் முயற்சி செய்து, இரண்டு பேர்களும், இந்த விற்பனை வரியிலிருந்து தப்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பதை நாம் உணரும்போது, இந்த விற்பனை வரி எவ்வளவு தகராருக்கு உரியதாக இருக்கிறது என்பது நன்கு விளங்கும். இந்தத் தகராறுகள் தீர ஒருமுனை விற்பனை வரி கொண்டுவந்துவிட்டால், வரியை விதிப்பதும் சுலபமாக இருக்கும், வசூலும் சரியாக நடக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். தவிரவும் இந்த ஒருமுனை விற்பனை வரி விதிப்பதின்மூலம், சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று நான் நினைக்கவில்லை. அப்படி ஒருமுனை விற்பனை வரி விதித்தால், திறமையாக வரியை வசூலிக்க முடியும். வியாபாரிகள் யாரும் தப்பிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். வியாபாரிகள் கேட்கின்றார்கள் என்று காரணத்தை மட்டும் கருதாமல், ஒருமுனை விற்பனை வரி வசூலிக்கவும் சுலபமானது, வியாபாரிகளுக்கும் சௌகர்யமானது, பொது மக்களுக்கும் வரிச்சுமை ஓரளவு குறையும் என்பதையும் மனதில் கொண்டு, ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டுவரவேண்டுமென்று பல வருஷங்களாக எதிர் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்லிவந்திருக்கிறோம். மந்திரி அவர்களும் பல சந்தர்ப்பங்களில் உறுதியாக சொல்லாவிட்டாலும்கூட, ஆலோசனையில் இருந்துவருகிறது என்று மூன்று வருஷங்களாக சொல்லிவந்திருக்கிறார்கள். இந்த ஆலோசனையின் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களும் கூட சமயத்திற்குத் தகுந்தபடி, யார் யார் நிர்ப்பந்தம் கொண்டுவருகிறார்களோ அவர்களுடைய அந்தஸ்திற்குத் தகுந்தமாதிரி, அவர்களை திருப்தி செய்யவும் ஆலோசனையில் இருக்கிறது என்று சொல்லிவந்திருக்கிறார்கள். உதாரணமாக விருதுநகர் மதுரை முதலிய இடங்களில் வியாபாரிகளை சந்திக்கும்போது இந்த ஒரு முனை விற்பனை வரி விஷயம் ஆலோசனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் ' இந்த வியாபாரிகளுக்கு என்ன வேலை, விற்பனை வரியை கடுமையாக வசூலிக்கப்போகிறேன் ' என்று சொல்லியிருக்கிறார்கள். இவற்றில் எதை எடுத்துச் சொல்லுவது என்று தெரியவில்லை. ஆகவே ஒருமுனை விற்பனை வரி கொண்டுவர சர்க்காருக்கு அப்பிராயம் இருக்கிறதா, இல்லையா என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, the sales-tax proposed under this Bill is only on certain articles, tobacco and its derivatives. We are not at present concerned with other articles and sales tax on them. That being so, I do not know why the hon. Member Sri Swamy Sahajananda has spoken about sales tax on grains and other things and said that the tax on those articles is very unreasonable and all that. Well, being a Swamiji, he is given to high flights of thinking. We need not worry about it.

" With regard to this amending Bill, it was found necessary as it was single-point tax. The very trouble arose on account of that. We have all along been contending that there will be this difficulty in having single-point tax as it will give rise to evasion. We find that there will be scope for evasion and that is why we have brought forward this amending Bill. That is my answer to

the hon. Deputy Leader of the Opposition. The question is not shelved. We are considering it. Very shortly, merchants and other Chambers of Commerce will be invited and their suggestions will also be taken into consideration before we come to a final conclusion.

" As regards this tax, it is to be levied either on the first sale or on the first purchase. It was pointed out that there is an excise duty also on the band roll variety of cigars and that there should be one tax only. Suppose this tax is not on sales but on first purchase, the first purchase has to be exempted if it works as a double tax. So, we thought of levying one tax either on the sale or purchase and allow a rebate if it amounted to double taxation. The purchaser may say that he is entitled to exemption. If he is exempted, we ordinarily expect that we can levy the tax on sale. But if he takes steps to avoid the paying of sales tax by disbursing his stuff to various people, so as to avoid coming in the group of turnover of Rs. 10,000 and over, we lose the tax. Only to prevent that, Sir, the words ' who is not exempt from taxation under section 3, sub-section (3) ' is proposed to be added now. As for the points raised by the hon. Member Sri Ratnam all these points were gone into during the discussion on the other Bill and finally we came to this understanding though some hon. Members opposed it as did the hon. the Deputy Leader of the Opposition opposed now, but the House accepted that legislation. So we cannot re-open it now. The only question before the House is the evation of the particular section of the Act and that is proposed to be plugged by the addition of these words. I hope the House will accept this measure."

DEPUTY SPEAKER :—" The question is—

' That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1955, be taken into consideration at once.' "

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 3, 2 and 1 and the Preamble were put and carried.

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I move—

' *That the Bill be passed.*' "

DEPUTY SPEAKER :—" The question is—

' That the Bill be passed.' "

The motion was put and carried.

(1) THE MADRAS CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1955—*cont.*

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I now submit the names of Members for the Select Committee on the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1955 :